தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 17, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 மே 31, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.”

தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள், தேவையான கருவி, தகுந்த காலம், செய்ய வேண்டிய முறை, தகுந்த இடம் ஆகிய ஐந்தினையும் குறித்து நன்கு தெளிவாக ஆராய்ந்து செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

சாலை அமைத்தல்

***4794—திரு. சி. ராஜா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, எளம்பிள்ளை சித்தர்மேல்மலை கோயிலுக்கு செல்ல மலைமீது புதிய சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

சங்கரி தொகுதி, எளம்பிள்ளை சித்தர்மேல்மலைக் கோயிலுக்குச் செல்ல மலைமீது புதிய சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள்.

சேலத்திலிருந்து சித்தர் கோயில் வழியாக எளம்பிள்ளை வரை செல்லும் 25 கிலோ மீட்டர் சாலை மாநில நெடுஞ்சாலைத் துறையால் அமைக்கப்பட்டு, அதில் பேருந்துகள் சென்று வருகின்றன. எளம்பிள்ளை சித்தர் கோயில் அடிவாரத்திலிருந்து சித்தர்மேல்மலைக் கோயில் செல்லும் பாதையானது சேலம் வனக் கோட்டத்திற்குட்பட்ட கஞ்சமலை காப்புக் காட்டிற்குள் 2 கிலோ மீட்டர் தூரம் வரை செல்கிறது. மூன்று அடி அகலமுள்ள இச்சாலை, கோயிலுக்குச் செல்ல அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் பக்தர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பாதையினை, புதிய பாதையாக அகலப்படுத்தும்பட்சத்தில் நிறைய மரங்கள் வெட்டப்பட வேண்டியுள்ளதால் வன உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படும் சூழ்நிலையும் உள்ளது. மேலும், இந்தப் பகுதி செங்குத்தாக உள்ளதால், வழித் தடம் மாற்றி அமைக்கப்படும்போது, வனப் பாதுகாப்புச் சட்ட விதிகளின்கீழ் மத்திய அரசின் அனுமதி பெற்று அமைக்கப்பட வேண்டியிருக்கிறது. இந்தக் கோயிலுக்கு மாதத்திற்கு இருமுறை மட்டுமே குறைந்த அளவில் மக்கள் சென்று வருகின்றனர். மேலும், இப்பகுதியில் வேறு குடியிருப்புகள் ஏதும் இல்லை. ஆகவே, இப்பாதையை வனங்கள் மற்றும் வன உயிரினங்களின் பாதுகாப்பினை முன்னிட்டு புதிய பாதையாக அமைக்க சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ள நிலையில், வனப் பாதுகாப்புச் சட்டத்திற்குட்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.

திரு. சி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதை விட்டு மறையாமல் ஒளிவீசிக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவி அம்மா

2018 மே 31]

அவர்களின் ஆத்மாவை வணங்குகிறேன். காவேரிக்கான சட்டப் போராட்டத்தில் வெற்றி கண்டு, ஸ்டெர்லைட் ஆலையை இருட்டாக்கி, மக்கள் மனங்களை வெளிச்சமாக்கிய எங்கள் கொங்கு நாட்டின் தங்கமே, பொதுமக்கள் என்ற போர்வையிலே சமூக விரோத கும்பலால் உருவாக்கப்பட்ட ஸ்டெர்லைட் ஆலை போராட்டத்திற்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று வீண் போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சி நடிப்பு நாயகர்களின் பேச்சுக்கு அக்னி கணை போல அள்ளி வீசிய வார்த்தைகளுக்கு அளித்த விளக்கத்திற்கு பதில் சொல்ல முடியாமல் வெளியேற வைத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கும் விவசாயக் குடும்பத்தில் மலர்ந்து, முதலமைச்சராக உயர்ந்து நிற்கும் எங்களின் பாச மலரே, எனது அரசியல் ஆசானே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, உங்களை வணங்கி, உங்களுக்குத் துணையாக நிற்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தர்மேல்மலைக் கோயில் பல சிறப்பு அம்சங்கள் பொருந்தியதாகும். இங்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சித்தர்கள் சிவனுக்கு பூஜை செய்து வழிபட்டு வந்ததாகவும், இப்போதும் அங்கு சித்தர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் ஐதீகம். வருடா வருடம் சித்ரா பௌர்ணமி அன்று இரவு நேரங்களிலே பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மலையேறி சித்தர்களின் அருள்பெற்று செல்கின்றனர். மேலே சென்று வரும் பாதையில் பெரியளவில் மரங்கள் ஏதும் கிடையாது. வன விலங்குகள் அதிகம் இல்லாத மலையாகவே உள்ளது. எனவே, பொதுமக்கள் சிரமமில்லாமல் மலையேறி, இறங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு ஆய்வு செய்து, பாதையைச் சீர்செய்து அகலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்வியில், குறிப்பிட்ட அந்தப் பகுதியில் சித்தர்கள்*

வாழ்வதாகவும், அங்கு செல்கின்ற பாதைகளை அகலப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பதனால், அந்தத் திட்டம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் பேசினேன். அப்பகுதியை முறையாக அகலப்படுத்த முடியுமா, மக்களின் வண்டிகள் போகின்ற அளவுக்கு பாதை அமைக்க முடியுமா என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசினேன். அவர், அந்தத் திட்டத்திற்குரிய கருத்துருவைக் கொண்டு வாருங்கள், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, செய்ய வேண்டிய பணிகளைச் செய்யலாம் என்று கூறினார். 'தான் ஆடாவிட்டாலும், தன் சதை ஆடும்' என்பதைப் போல, தன்னுடைய மாவட்டத்திற்கு முன்னுரிமை அளித்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற காரணத்தினாலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, அது என்னுடைய பழைய தொகுதி, என்னுடைய* recommendation*–ஐயும் சேர்த்துக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *சங்கரி தொகுதி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய பழைய தொகுதி என்ற வகையிலும், அதற்கு முன்னுரிமை கிடைப்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்களுடைய கோரிக்கைகளை விரைவில் நிறைவேறுகின்ற நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. எனவே, உரிய கருத்துருவை மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் வனத் துறைக்கு சமர்ப்பிக்கும்பட்சத்தில், வனச் சட்டங்களுக்குட்பட்டு, அனுமதி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, அப்பகுதியை முறையாக ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி ஊராட்சி ஒன்றியம், தேவண்ணகவுண்டனூர்*

2018 மே 31]

ஊராட்சியில் கொங்கணர் சித்தர் தியானம் செய்த குகை பெரிய பாறைகளுக்கிடையில் உள்ளது. இந்த குகை பிரசித்தி பெற்றது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் இந்த கொங்கணர் சித்தர் குகைக்கு வந்து செல்கின்றனர். பக்தர்களின் வசதிக்காகவும், அங்கு இருக்கின்ற விவசாயிகளின் வசதிக்காகவும், அங்கு குடியிருப்பவர்களுடைய வசதிக்காகவும், ஊரக வளர்ச்சித் துறைமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்படி, 2 கி.மீ. தூரத்திற்கு ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆனால், கொங்கணர் சித்தர் குகைக்கும், குடியிருப்புப் பகுதிக்கும், விவசாய நிலங்கள் உள்ள பகுதிக்கும் தார்ச் சாலை அமைக்க வேண்டிய பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான 150 மீட்டர் மண் சாலை உள்ளது. எனவே, வனத் துறைக்குச் சொந்தமான அந்த 150 மீட்டர் நிலத்தில், 25 அடி அகலத்தில் தார்ச் சாலை அமைக்க வனத் துறை அனுமதி வழங்க வேண்டுகிறேன். மேற்படி தார்ச் சாலை அமைக்க ஒதுக்கீடு செய்யப்படும் வன நிலத்திற்கு ஈடாக நிலங்கள் வழங்குவதற்கு அங்குள்ள விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பகுதியில் சாலை அமைக்க வனத் துறையினுடைய அனுமதி வேண்டி உரிய கருத்துருவை வனத் துறையிடம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் வனச் சட்டங்களுக்குட்பட்டு, உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரிடம் தேவையான நிதியைப் பெறுகின்ற நல்ல சூழ்நிலை உருவானால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நாங்குநேரி தொகுதியில், நம்பிக்கை தருகின்ற நம்பி கோயில் இருக்கிறது. அங்கு யார் சென்றாலும், அவர்கள் எதை நினைத்து போகின்றார்களோ அது நிச்சயமாக நடக்கும் என்ற ஓர் ஐதீகம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், அங்கு செல்லும் பாதை மிகவும் கடினமாக இருக்கிறது. இதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டுமென்றுதான் கடந்த முறையும் எனக்கு பதில் சொன்னார்கள். மத்திய அரசிடமிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதியைப் பெற்று, சாலையை அமைத்துக் கொடுத்தால் உலகமெங்கும் இருந்து வருகின்ற பக்தர்கள் அந்தப் பெருமாளை தரிசிப்பதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாங்குநேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு, சம்பந்தப்பட்ட மாவட்டத்திலிருக்கின்ற வனத் துறை அதிகாரியிடம் உரிய கருத்துருவைக் கொடுத்து, அதை மத்திய அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கின்ற வகையில், சட்டப்படி அவர் மனுவைக் கொடுத்தால், ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் வணங்கி, அவருக்கு உறுதுணையாக நின்று பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்கு*

2018 மே 31]

உட்பட்ட கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம் 100-க்கு 90 சதவிகித மலைவாழ் மக்கள் வாழும் பகுதியாகும். அவர்கள் வாழும் குடியிருப்புப் பகுதியான திண்ணனூர்நாடு ஊராட்சியில் அமைந்துள்ள கத்தகாபாறைபட்டி கிராமத்தில் 100 குடும்பங்களாக மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய வேளாண்மைப் பொருட்களான நெல், கேழ்வரகு மற்றும் பழ வகைகளான அன்னாசி, கொய்யா, பலாப்பழம் போன்ற பொருட்களைக் கொண்டு செல்ல சாலை வசதி இல்லாததால் 2 கிலோ மீட்டர் தூரம் வரை அவற்றை தலையில் சுமந்து சென்று தார்ச் சாலையை அடையும் நிலை உள்ளது. மேலும், பள்ளிக் குழந்தைகள் திட்டகராயப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குச் செல்ல காட்டாற்றின் குறுக்கே 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்கின்ற கஷ்டமான நிலை உள்ளது. அது வனத் துறைக்குச் சம்பந்தப்பட்ட மண் சாலையாக உள்ளது. மரம் ஏதுமில்லை. திட்டகராயப்பட்டி முதல் கத்தகாபாறைபட்டி வரை 2 கிலோ மீட்டர் தூரமும் மண் சாலையாக உள்ளது. எனவே, வனத் துறைமூலம் அந்தச் சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டுகிறேன். காட்டாற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள அரியூர்நாடு ஊராட்சி, அரியூர்கஸ்பா கிராமத்தில் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு வனத் துறைக்குச் சம்பந்தப்பட்ட சாலை மண் சாலையாக உள்ளது. அந்த மண் சாலையிலும் எந்த மரங்களும் இல்லை. வாகனங்கள் எல்லாம் சென்று கொண்டிருக்கின்றன. எனவே, இந்த 3 கிலோ மீட்டர் மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலை மற்றும் 3 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலை ஆக மொத்தம் 5 கிலோ மீட்டருக்கு தார்ச் சாலை தேவையென்பதை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த தார்ச் சாலை போடுவதற்கு முன்பாக, எந்தப் பாதிப்பும் இல்லாமல் மக்கள் செல்வதற்கு வசதியாக கப்பி ரோடு போட வேண்டுமென்று*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எனக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும், அவர் சொல்லியிருக்கிற அந்தச் சாலைகள் சம்பந்தமாக அவர்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த வனத் துறை அதிகாரிகளிடம் கருத்துருவைக் கொடுத்தால் மத்திய அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டுமென்றால், மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெறப்படும். நம்முடைய அரசின் அனுமதியே போதுமென்று சொன்னால் நாங்களே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் மற்றும் எல்லோரிடமும் கலந்து பேசி மேற்படி சாலைகள் அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து வந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சேலம் மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், ஆத்தூர் வட்டம் ஆகிய இந்த இரண்டு வட்டங்களிலுள்ள கல்வராயன் மலைப் பகுதியில் 25,000 பொதுமக்கள் வாழ்ந்து வருகிறார்கள். சுதந்திரம் அடைந்து இத்தனை காலத்திற்குப் பிறகும் மண் சாலைகளிலேயே மக்கள் நடந்து வருகிறார்கள். கருமன்துறையிலிருந்து ஆத்தூர் வட்டத்திற்கு வரவேண்டுமென்றால் 4 மணி நேரம் ஆகிறது. அதனால், நாகலூர் எல்லையிலிருந்து இராமநாயக்கன்பாளையம் வரை 5½ கிலோ மீட்டர் தூரம் தார்ச் சாலை அமைத்துக் கொடுத்தால் ¾ மணி நேரத்தில் ஆத்தூர் வட்டத்தை வந்தடையலாம். அங்கு இருக்கக்கூடிய பொதுமக்களுக்கும் உயிர் வாழ்வதற்குண்டான மருத்துவ சேவை விரைவில் கிடைப்பதற்கு உகந்ததாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அவசியம் தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

2018 மே 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திரு. வசந்தகுமார் அவர்களைத் தவிர, மூலக் கேள்வி கேட்ட திரு. ராஜா அவர்கள் சங்கரி தொகுதியைப் பற்றியும், மற்ற எல்லோருமே* Salem Special*–ஐப்போல, சேலம் மாவட்டத்திற்கு உரிய மலைப் பகுதிகளுக்கான கேள்விகளையே கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னதம்பி அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலைகளுக்கான கருத்துருவை அனுப்பினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அவற்றையும் அமைக்கப் பரிசீலிப்போம் என்கிற உறுதியை அவருக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை விவாதம் தொடங்குவதற்குமுன் எவ்வாறு திட்டங்களை வகுப்பது, எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதைப் பற்றியெல்லாம் துறைவாரியாக விரிவாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி ஆலோசிக்கப்பட்டது. வனத் துறை சம்பந்தமாக ஆய்வுக் கூட்டம் நடந்தபோது பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அதிலே மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், வனத் துறை செயலாளர், அத்துறை அதிகாரிகள், தலைமைச் செயலாளர் மற்றும் நிதித் துறைச் செயலாளர் அனைவரும் கலந்து கொண்டனர். அதிலே 20 மாவட்டங்களிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் நிலவிக் கொண்டிருக்கின்றன என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. மலைகளில் வாழ்கின்ற மலைவாழ் மக்கள், அவர்களுக்குத் தேவையான பாதை வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி, தெரு விளக்கு வசதி, குடியிருப்பதற்குத் தேவையான குடியிருப்பு வசதி போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று 20 மாவட்டங்களிலிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்காக, வருவாய்த்*

துறை, வனத் துறை, உள்ளாட்சித் துறை போன்ற துறைகளெல்லாம் இணைந்து, மாவட்ட அளவிலே ஓர் ஆய்வு செய்து, அந்த ஆய்வு அறிக்கையைப் பெற்று, எந்தெந்த மாவட்டத்திலே, எந்தெந்த மலைப் பகுதியிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் மாவட்ட அளவிலே ஆய்வு செய்து, ஆய்வு அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்து, அந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையிலே, அந்தந்த மலைப் பிரதேசங்களிலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, அந்த அறிக்கைகளெல்லாம் கிடைக்கப் பெற்றவுடன், பல ஆண்டு காலமாக தீர்வு காணப்படாத இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். எந்தெந்த மலைப் பிரதேசப் பகுதிக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற வேண்டும் என்பதெல்லாம் கண்டறியப்பட்டு, அது உரிய முறையிலே மத்திய அரசுக்கு தெரிவிக்கப்படும். மாநில அரசு, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று, மலைக் கிராமங்களிலே வாழ்கின்ற மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு முயற்சி செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீராம பிரான் காலத்தில் அகலிகை கல்லாக இருந்தபோது ஸ்ரீராமர் கால் பட்டவுடனேயே உயிர் பெற்று எழுந்தார்களாம். அதைப்போல, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வனப் பகுதிவாழ் மக்களுக்கு என்னென்ன செய்யப்படும் என்பதைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டதை உறுதியாக இங்கு தெரிவித்திருப்பதன்மூலம் உறுதியான முதலமைச்சர் என்பதை நிரூபித்திருக்கிறார். தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற வனச் சாலைப் பணிகள் பற்றி கேள்விகள் கேட்ட அனைவருக்கும் அவை நிறைவேற்றப்படும் என்கிற நல்ல உறுதியை சொல்லியிருப்பதால் மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பிலே, வனத் துறையின் சார்பிலே என்னுடைய நன்றியை*

2018 மே 31]

அவருக்கு காணிக்கையாக்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

92—

குளங்களைத் தூர் வாருதல்

***4463—திரு. அம்மன் கே. அர்ச்சுணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் தெற்கு தொகுதி, பெரியகுளம், செல்வ சிந்தாமணி குளம் மற்றும் வாலாங்குளம் ஆகிய குளங்களைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாலாங்குளத்தில் தனியார் தொண்டு நிறுவன பங்களிப்புடன் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது முழுமையாக நீர் நிரம்பியுள்ளது. செல்வ சிந்தாமணி குளம் மற்றும் பெரியகுளம் இரண்டிலும் நீர் நிரம்பியுள்ளது. இந்த மூன்று குளங்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபோது 2015 ஆம் ஆண்டிலேயே சீரமைக்க உத்தரவிட்டார். அதன்படி Smart City *திட்டத்தின்கீழ் அவற்றைப் புனரமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தற்போது நடவடிக்கையில் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த திட்டமென்பதால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் வேகமாக முடிக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, இந்தத் திட்டம்*